Australian Government
Services Australia

TAMIL

# Temporary Protection Visa Subclass 785 மற்றும் Safe Haven Enterprise Visa Subclass 790 வைத்திருப்பவர்களுக்கான Special Benefit பலன்

உங்களுக்குத் Temporary Protection Visa (TPV) Subclass 785 அல்லது ஒரு Safe Haven Enterprise Visa (SHEV) Subclass 790 வழங்கியிருக்கிறார்கள் என்றால், உங்களுக்கு இனிமேல் Status Resolution Support Services (SRSS) பணப்பட்டுவாடா கிடைக்காது. நீங்கள் நிதி நெருக்கடியில் இருக்கிற பட்சத்தில், நீங்கள் Special Benefit பெற்றுக்கொள்ளத் தகுதியடையலாம்.

நீங்கள் Special Benefit பெற்றுக்கொள்ள வேண்டுமானால்:

- உங்கள் கை மீறிய காரணங்களினால் நீங்கள் நிதி நெருக்கடியில் இருந்தாக வேண்டும்
- உங்களையும், உங்கள் குடும்பத்தையும் பார்த்துக் கொள்வதற்குப் போதுமான அளவிற்கு உங்களால் சம்பாதிக்க இயலாமல் இருந்தாக வேண்டும்
- இன்னொரு வித ஆதரவுப் பணப்பட்டுவாடாவைப் பெற்றுக்கொள்ள இயலாதவராக இருந்தாக வேண்டும்
- கிடைக்கிற நிதிகளில் $5,000 தொகைக்கு மேல் கையில் இல்லை.

கூடுமானமட்டும் விரைவானதோர் தேதியிலிருந்து பணப்பட்டுவாடா கிடைக்க ஆரம்பிப்பதை உறுதி செய்து கொள்ள, உங்களது கோரிக்கையை, அதற்கான ஆதார ஆவணங்கள் அனைத்தோடும் கூடிய விரைவில் சமர்ப்பியுங்கள்.

உங்களுக்கு ஒரு குழந்தை அல்லது குழந்தைகள் இருந்தால், நீங்கள் குடும்பப் பணப்பட்டுவாடாவிற்குக் கோரிக்கை விடுக்கலாம். மேலும் தகவலுக்கு **servicesaustralia.gov.au/families** சென்று பாருங்கள்

## எவ்விதம் Special Benefit கோரிக்கை விடுப்பது

கோரிக்கை விடுப்பதற்கான மிக எளிதான வழி இணையத்தில் விண்ணப்பிப்பதேயாகும். இத நீங்கள் உங்களது Centrelink இணையக் கணக்கில் **myGov** வாயிலாகச் செய்து கொள்ளலாம்.

உங்களிடம் ஒரு myGov அல்லது Centrelink இணையக் கணக்கு இல்லை என்றால், இக்கணக்குகளை **my.gov.au** சென்று உருவாக்குங்கள்.

உங்களுக்கு Centrelink Customer Reference Number (CRN) அவசியமாகும். உங்களது CRN எண், நாங்கள் உங்களுக்கு அனுப்பியிருக்கிற கடிதங்களிலோ அல்லது உங்களிடம் சலுகை அட்டை ஒன்று இருந்தால் அதிலோ, இருக்கும்.

நீங்கள் தகவல் தொடர்பு வாரிசு ஒருவரை நியமித்திருந்தால், அவர்கள் உங்களுக்காக இணையத்தில் அதைக் கோரிப்பெறலாம்.

உங்களுக்கு myGov சம்பந்தமாக உதவி தேவையென்றால், நீங்கள் **132 307** எண்ணில் அழைக்கலாம் அல்லது **servicesaustralia.gov.au/mygov** சென்று பார்க்கலாம்

## இணையத்தில் கோரிக்கை விடுக்க

1. myGov இல் புகுபதிகை செய்து, **Centrelink**சென்று பாருங்கள்.
2. மெனுவில் இருந்து **Payments and Claims** என்பதைத் தெரிவு செய்து விட்டு, **Claims**-ஐயும், அதன்பின் **Make a claim**-ஐயும் தெரிவு செய்யுங்கள்.
3. அடுத்து **Other Payments**-இன் கீழ் **Get started** என்பதைத் தெரிவு செய்யுங்கள்.
4. பின் **Apply for Special Benefit**என்பதைத் தெரிவு செய்யுங்கள்
5. எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளியுங்கள். கோரிக்கையைப் பூர்த்தி செய்ய உதவுவதற்கான தகவல்கள் ஒவ்வொரு திரையிலும் உள்ளன. இதில், உங்களது ஆதார ஆவணங்களை எவ்விதம் சமர்ப்பிப்பது என்பதும் அடங்குகிறது.
6. உங்களது கோரிக்கையை சமர்ப்பியுங்கள்.

உங்களது கோரிக்கையை இணையத்தில் சமர்ப்பித்து விட்ட பிறகு, உங்களுக்கு ஒரு இரசீது கிடைக்கும். அதில்:

- உங்களது கோரிக்கை வெற்றிகரமாக சமர்ப்பித்தாயிற்று என்றிருக்கும்
- உங்களது கோரிக்கையின் அடையாள எண்ணிருக்கும்
- அது குறித்த நடவடிக்கை விவரங்களுக்கான இணைப்பு இருக்கும்.

உங்களது கோரிக்கையில் எடுத்த நடவடிக்கை விவரங்களை உங்களது myGov கணக்கு அல்லது உங்களது Express Plus Centrelink மொபைல் செயலி வாயிலாகப் பார்க்கலாம்.

## காகிதக் கோரிக்கை

உங்களால் இணைய வாயிலாகக் கோரிக்கை விடுக்க முடியவில்லை என்றால், காகித வடிவில் உள்ள **Claim for Special Benefit (SU004)** படிவத்தைப் பூர்த்தி செய்து கையொப்பமிட்டு அனுப்புங்கள். அந்தப் படிவத்தை நீங்கள் **servicesaustralia.gov.au/forms** இல் பதிவிறக்கிக் கொள்ளலாம்

அந்தக் கோரிக்கைப் படிவம், கேள்விகளில் உங்களுக்கு வழிகாட்டி, உங்களுக்கு என்னென்ன ஆவணங்கள் தேவை என்பதை உங்களுக்குச் சொல்கிறது. இதில், நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும் வேறு எந்தப் படிவமும் அடங்கியிருக்கிறது.

பூர்த்தி செய்த உங்களது படிவத்தையும், அதற்கான ஆதார ஆவணங்கள் அனைத்தையும் நேரில் சென்று ஒரு சேவை மையத்தில் கொடுங்கள் அல்லது இம்முகவரிக்கு அஞ்சல் செய்யுங்கள்:

**Services Australia**

**Centrelink**

**Reply Paid 7800**

**CANBERRA BC ACT 2610**

நீங்கள், உங்களது படிவத்தைக் காகித வடிவில் சமர்ப்பிக்கிறீர்கள் என்றால், உங்களால் அதுகுறித்து எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பார்க்க முடியாது.

## உங்கள் Special Benefit கோரிக்கைக்கான ஆதார ஆவணங்கள்

நீங்கள் Special Benefit கோரிப்பெறும் போது, நீங்கள் எங்களிடம் கொடுத்தாக வேண்டியது:

- உங்களது, அயல்நாட்டுக் கணக்குகள் உள்ளிட்ட, வங்கிக் கணக்குகள் அனைத்திற்குமான, குறைந்தது 3 மாதங்களுக்கான கணக்கு அறிக்கைகள். உங்களுக்குத் துணைவர்/துணைவி ஒருவர் இருந்தால், அவர்களது எல்லாக் கணக்குகளுக்குமான வங்கிக் கணக்கு அறிக்கையும் உங்களுக்குத் தேவைப்படலாம்
- வரி சமர்ப்பண எண்
- அடையாள அத்தாட்சி.

உங்களது கோரிக்கையின் ஒரு பகுதியாக நீங்கள் மற்ற ஆவணங்களையும் எங்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கலாம். இது உங்களது சூழ்நிலையையும், நாங்கள் உங்களிடம் கேட்க வேண்டியுள்ள கேள்விகளையும் பொருத்துள்ளது.

## கோரிக்கை முடிவு

உங்களது கோரிக்கை குறித்த முடிவை நாங்கள் உங்களுக்குத் தெரிவிப்போம். நாங்கள் ஒரு இணைய வழியிலான கடிதத்தை உங்களது:

- myGov Inbox-க்கோ
- Centrelink இணையக் கணக்கிற்கோ
- Express Plus Centrelink மொபைல் செயலிக்கோ அனுப்பி வைக்கலாம்.

உங்களுக்கு இணைய வழியாகக் கடிதங்கள் வரவில்லை என்றால், நாங்கள் உங்களுக்கு அஞ்சல் வாயிலாக ஒரு கடிதத்தை அனுப்பி வைப்போம்.

உங்களது கோரிக்கை குறித்து நாங்கள் எடுத்துள்ள முடிவை நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்றால், நீங்கள் அதை மறுஆய்வு செய்யும்படி கேட்கலாம்.

## உங்களது Special Benefit கோரிக்கைக்கு அனுமதியளித்து விட்டார்கள் என்கிற பட்சத்தில், முக்கியமான தகவல்கள்

உங்களுக்கு Special Benefitகிடைத்து விடுகிற பட்சத்தில், உங்களிடம் தற்போது ஒரு Safe Haven Enterprise Visa (SHEV) Subclass 790 Visa வீசா இருக்கிறதென்றால், இது நிரந்தர வீசா பெறுவதற்கான உங்களது தகுதியைப் பாதிக்கலாம். நீங்கள் குடும்பப் பண உதவி பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்றால், நிரந்தர வீசா

பெறுவதற்கான தகுதியை அது பாதிக்காது. மேலும் தகவலுக்கு Department of Home Affairs இணையதளமான **homeaffairs.gov.au**-க்குச் சென்று பாருங்கள்

நாங்கள் உங்களுக்கு ஒரு Health Care Cardஅட்டையை அனுப்பி வைப்போம், அது உங்களுக்கு மலிவான சுகாதார சேவைகள் மற்றும் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள உதவும். மேலும் தகவலுக்கு**servicesaustralia.gov.au/concessioncards** சென்று பாருங்கள்

## Mutual Obligation Requirements (பரஸ்பர கடப்பாட்டுத் தேவைகள்)

உங்களுக்கு Special Benefit கிடைத்துவிடுகிறதென்றால், உங்களுக்கு பரஸ்பர கடப்பாட்டுத் தேவைகள் இருக்கலாம். இவையே, ஒரு வேலையைத் தேடிக்கொள்ள உதவுவதற்கான, அங்கீகரித்துள்ள பணிகள் மற்றும் செயல்பாடுகளாகும். இவற்றை உங்களது Job Plan பட்டியலிடுகிறது.

நீங்கள் உங்களுக்கு வேலைவாய்ப்பு சேவைகளை வழங்கும் நிறுவனத்தில் நேர்காணலுக்குச் சென்று, உங்களது Job Plan இல் இருக்கிற செயல்பாடுகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும். நீங்கள் இவற்றைச் செய்யவில்லை என்றால், உங்களுக்குக் கிடைக்கும் பணவுதவியைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் அல்லது நிதி அபராதங்கள் பொருந்தலாம். மேலும் தகவலுக்கு **servicesaustralia.gov.au/mutualobligation** சென்று பாருங்கள்

நீங்கள் ஒவ்வொரு இருவாரங்களுக்கு ஒருமுறை சம்பாதிக்கிற பணம் எதையும் குறித்து எங்களிடம் சொல்லியாக வேண்டும். உங்களுக்கு ஒரு துணைவர்/துணைவி இருந்தால், அவர்களது வருமானத்தைக் குறித்து நீங்கள் எங்களிடம் சொல்ல வேண்டியிருக்கும். நீங்களோ அல்லது உங்களது துணைவர்/துணைவியோ வருமானம் எதையும் ஈட்டவில்லை என்றால், அப்போதும் நீங்கள் உங்களது வருமானம் பூஜ்ஜியம் என்பதை எங்களுக்குச் சொல்ல வேண்டும். அதை நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்கவில்லை என்றால், நாங்கள் உங்களுக்குத் தவறான தொகையைக் கொடுத்துவிடலாம் அது ஒரு கடனில் போய் முடிந்து விடலாம்.

உங்களது முதல் பணப்பட்டுவாடாவைப் பெற்றுக்கொள்ள, நீங்கள் கடந்த இரண்டு வாரங்களில், அது பூஜ்ஜியமாக இருந்தாலும் கூட, சம்பாதித்த, உங்களது மற்றும் உங்களது துணைவர்/துணைவியரது வருமானத்தைக் குறித்து எங்களிடம் சொல்லியாக வேண்டும். இதைச் செய்யும் வரையில் உங்களுக்குப் பணவுதவி கிடைக்காது. மேலும் தகவலுக்கு **servicesaustralia.gov.au/incomereporting** சென்று பாருங்கள்

### எங்களிடம் சொல்ல வேண்டியது, நீங்கள்:

- கூட்டாக $5,000 தொகைக்கு மேல் வைத்திருந்தால்
- வேலையை ஆரம்பித்தால், நிறுத்தினால் அல்லது மாற்றினால்
- முகவரியை மாற்றினால் அல்லது உங்களது வாடகைத் தொகை மாறினால்
- உங்களது தொடர்பு அல்லது வங்கிக் கணக்கு விவரங்களை மாற்றினால்
- உங்களது துணைவர்/துணைவியிடமிருந்து பிரிந்தால் அல்லது புதிய துணைவர்/துணைவியைச் சேர்த்துக்கொண்டால்

- ஒரு குழந்தையைப் பெற்றுக்கொண்டாலோ அல்லது ஒரு குழந்தையைக் கவனித்துக்கொள்ள ஆரம்பித்தாலோ அல்லது நிறுத்திக் கொண்டாலோ
- உங்களது குழந்தைக்கான குழந்தைப் பராமரிப்பை மாற்றினால்
- உங்களுக்கு 16 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய ஒரு பிள்ளை இருந்து அவர் படிப்பை நிறுத்தி விட்டால்
- அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறத் திட்டமிட்டுக்கொண்டிருந்தால்
- உங்களது வீசாவை அல்லது வசிப்பிட நிலைமையை மாற்றினால்
- முழு நேர ஆய்வை ஆரம்பித்தால்
- குடும்ப அல்லது வீட்டு வன்முறையை அனுபவிப்பது போன்ற மற்ற மாற்றங்கள் ஏற்பட்டால்.

## Special Benefit மறுஆய்வு

நீங்கள் இப்போதும் தகுதியுடையவராக இருக்கிறீர்கள் என்பதையும், சரியான தொகையைத் தான் பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்பதையும் உறுதி செய்து கொள்ள, ஒவ்வொரு 13 வாரங்களுக்கு ஒருமுறை உங்களுக்கான பணவுதவியை நாங்கள் மறுஆய்வு செய்வோம்.

இம்மறுவாய்வை, உங்களது myGov கணக்கு வாயிலாக இணையத்திலேயே செய்து முடித்திடலாம். உங்களிடம் ஒரு myGov கணக்கில்லை என்றால், உங்களுக்குக் காகித வடிவில் ஒரு மறுஆய்வுப் படிவத்தை அனுப்பி வைப்போம். ஒவ்வொரு மறுஆய்விற்கும், உங்களிடமுள்ள அனைத்து வங்கிக் கணக்குகளுக்குமான, குறைந்த பட்சம் 3 மாதங்களுக்கான கணக்கு அறிக்கைகளைத் தந்தாக வேண்டும். உங்களுக்குத் துணைவர்/துணைவி ஒருவர் இருந்தால், அவர்களது எல்லாக் கணக்குகளுக்குமான வங்கிக் கணக்கு அறிக்கையும் உங்களுக்குத் தேவைப்படலாம்.

நீங்கள் இந்த Special Benefit மறுஆய்வைப் பூர்த்தி செய்து, அதை உரிய தேதி வாக்கில் அனைத்து ஆதார ஆவணங்களையும் சமர்ப்பித்தாக வேண்டும் அல்லது உங்களது Special Benefit பண உதவி நின்று போய்விடும்.

# மேலும் தகவலுக்கு

- எங்களை Special Benefit பண உதவிக்கான **132 850** என்ற தொலைபேசி எண்ணில் அழைத்து, உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் எவரும் தேவையா என்பதை எங்களிடம் தெரிவித்திடுங்கள். நாங்கள் அப்படியொருவரை கட்டணமில்லாமலேயே ஏற்பாடு செய்திடுவோம். எங்களது தொலைபேசி எண்களின் பட்டியலைப் பெற **servicesaustralia.gov.au/phone-us** சென்று பாருங்கள்
- Centrelink பணப்பட்டுவாடாக்கள் மற்றும் சேவைகள் குறித்து உங்கள் மொழியிலேயே எங்களிடம் பேச **131 202** என்ற எண்ணில் தொலைபேசியில் அழைத்துப் பேசுங்கள்
- Medicare மற்றும் Child Support பணப்பட்டுவாடாக்கள் மற்றும் சேவைகள் குறித்து உங்கள் மொழியிலேயே எங்களிடம் பேச **131 450** என்ற எண்ணில் Translating and

Interpreting Service (TIS National) அமைப்பைத் தொலைபேசியில் அழைத்துப் பேசுங்கள்

- நீங்கள் **servicesaustralia.gov.au/yourlanguage** என்பதில், உங்களால் உங்கள் மொழியில் வாசிக்க, கேட்க அல்லது பார்க்கவும் முடியும்.
- ஆங்கிலத்தில் மேலும் தகவல்கள் பெற **servicesaustralia.gov.au/specialbenefit** என்பதில் பார்க்க
- சேவை மையம் ஒன்றுக்கு நேரில் சென்று வாருங்கள்.

**குறிப்பு:** ஆஸ்திரேலியாவில் எங்கிருந்தும், உங்கள் வீட்டு தொலைபேசியிலிருந்து '13' எண்களுக்குச் செய்யும் தொலைபேசி அழைப்புகளுக்கு ஒரே குறித்த விகிதத்தில் கட்டணம் விதிக்கிறார்கள். அக்கட்டண விகிதம், ஒரு உள்ளூர் அழைப்புக் கட்டணத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கலாம், அதோடு அது தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபடவும் செய்யலாம். உங்கள் வீட்டுத் தொலைபேசியில் இருந்து '1800' எண்களுக்குச் செய்யும் தொலைபேசி அழைப்புகள் இலவசமானவையாகும். பொதுத் தொலைபேசிகள் மற்றும் கைபேசிகளில் இருந்து செய்யும் அழைப்புகளுக்கு, இதைவிட அதிகமானதோர் கட்டணத்தை விதிக்கலாம்.

## பொறுப்பறிவிக்கை

இந்தப் பிரசுரத்தில் இருக்கிற தகவல்கள், பணப்பட்டுவாடாக்கள் மற்றும் சேவைகளுக்கானதோர் வழிகாட்டியாக இருக்கும் நோக்கத்திற்கானவை மட்டுமே. நீங்கள் பணப்பட்டுவாடா ஒன்றுக்காக விண்ணப்பிக்க விரும்புகிறீர்களா என்றும், உங்களது குறிப்பான சூழ்நிலைகள் சம்பந்தமாக விண்ணப்பம் ஒன்றைச் செய்கிறீர்களா என்றும் முடிவு செய்வது உங்களது பொறுப்பேயாகும்.

Australian Government
Services Australia

ENGLISH

# Special Benefit for Temporary Protection Visa Subclass 785 and Safe Haven Enterprise Visa Subclass 790 holders

If you have been granted a Temporary Protection Visa (TPV) Subclass 785 or a Safe Haven Enterprise Visa (SHEV) Subclass 790, you will no longer get the Status Resolution Support Services (SRSS) payment. You may be able to get Special Benefit if you are in financial hardship.

To get Special Benefit, you must:

- be in financial hardship for reasons beyond your control
- be unable to earn enough to support yourself and your family
- be unable to get another income support payment
- have no more than $5,000 in available funds.

To make sure payment can start from the earliest possible date, lodge your claim with all supporting documents as soon as possible.

If you have a child or children, you can claim for family payments. For more information, go to **servicesaustralia.gov.au/families**

## How to claim Special Benefit

The easiest way to claim is online. You can do this in your Centrelink online account through **myGov**.

If you do not have a myGov or Centrelink online account, go to **my.gov.au** to create these accounts.

You will need your Centrelink Customer Reference Number (CRN). Your CRN is on letters we have sent you or on your concession card, if you have one.

If you have a correspondence nominee, they can also claim for you online.

For help with myGov, you can call **132 307** or go to **servicesaustralia.gov.au/mygov**

## To claim online

1. Sign in to myGov and go to **Centrelink**.
2. Select **Payments and Claims** from the menu, then **Claims**, then **Make a claim**.
3. Under **Other Payments**, select **Get started**.
4. Select **Apply for Special Benefit**
5. Answer all the questions. Each screen has information to help you complete the claim. This includes how to submit your supporting documents.
6. Submit your claim.

After you submit your claim online, you will get a receipt. It will tell you:

- your claim submission was successful
- the ID number of your claim
- a link to track its progress.

You can track the progress of your claim online through your myGov account or your Express Plus Centrelink mobile app.

## Paper claim

If you cannot claim online, fill in and sign the **Claim for Special Benefit (SU004)** paper form. You can download the form at **servicesaustralia.gov.au/forms**

The claim form guides you through the questions and tells you what documents we need. This includes any other forms you may need to complete.

Return your completed form and all supporting documents in person at a service centre or post to:

**Services Australia**

**Centrelink**

**Reply Paid 7800.**

**CANBERRA BC ACT 2610**

You will not be able to track the progress of your claim if you submit a paper form.

## Supporting documents for Special Benefit claim

When you claim Special Benefit, you must give us your:

- bank statements for the last 3 months for all your accounts, including overseas accounts. If you have a partner, we will also need bank statements for all their accounts
- Tax File Number
- Proof of Identity.

You may need to give us other documents as part of your claim. This depends on your situation and the questions we need to ask you.

## Claim decision

We will let you know the result of your claim. We will send an online letter to either your:

- myGov Inbox
- Centrelink online account
- Express Plus Centrelink mobile app.

If you do not get online letters, we will send you a letter in the mail.

You can ask for a review if you do not agree with the decision we have made about your claim.

## Important information if your Special Benefit claim is granted

If you get Special Benefit, it may affect your eligibility for a permanent visa if you currently hold a Safe Haven Enterprise Visa (SHEV) Subclass 790 Visa. If you get family payments, your eligibility for a permanent visa will not be affected. For more information, go to the Department of Home Affairs website at **homeaffairs.gov.au**

We will send you a Health Care Card, which will help you get cheaper health services and medicines. For more information, go to **servicesaustralia.gov.au/concessioncards**

## Mutual obligation requirements

If you get Special Benefit you may have mutual obligation requirements. These are approved tasks and activities you agree to do, to help you find a job. Your Job Plan lists these.

You need to go to appointments with your employment services provider and complete the activities in your Job Plan. If you don't do these things, your payment could be suspended and financial penalties may apply. For more information, go to **servicesaustralia.gov.au/mutualobligation**

You must tell us about any money you earn each fortnight. If you have a partner, you also need to tell us their income. If you or your partner do not earn any income, you still need to tell us your income was zero. If you do not let us know, we may pay you the wrong amount and this can result in a debt.

To get your first payment, you need to tell us about any money you and your partner earned for the past 2 weeks even if it is zero. You will not get your payment until you do this. For more information, go to **servicesaustralia.gov.au/incomereporting**

## You need to tell us if you:

- have combined funds of more than $5,000
- start, stop or change jobs
- change address or your rent amount changes
- change your contact or bank account details
- separate from your partner or have a new partner
- have a baby or start or stop looking after a child
- change child care for your child
- have a child aged 16 or over who stops study
- are planning to leave Australia
- change your visa or residency status
- commence full time study
- have other changes such as experiencing family and domestic violence.

# Special Benefit review

We review your payment every 13 weeks to make sure you are still eligible and getting the right amount.

The review can be completed online through your myGov account. If you do not have a myGov account, a paper review form will be mailed to you. For each review, you must provide bank statements for the last 3 months for all accounts you have. If you have a partner, we will also need bank statements for all their accounts.

You must complete the Special Benefit review and submit all supporting documents by the due date or your Special Benefit payments will stop.

## For more information

- call the Special Benefit payment line **132 850** and let us know you need an interpreter. We will arrange one for free. For a list of our phone numbers, go to **servicesaustralia.gov.au/phone-us**
- call **131 202** to speak with us in your language about Centrelink payments and services
- call the Translating and Interpreting Service (TIS National) on **131 450** to speak with us in your language about Medicare and Child Support payments and services
- go to **servicesaustralia.gov.au/yourlanguage** where you can read, listen to or watch information in your language.
- go to **servicesaustralia.gov.au/specialbenefit** for more information in English.
- visit a service centre.

**Note**: calls from your home phone to ‘13’ numbers from anywhere in Australia are charged at a fixed rate. That rate may vary from the price of a local call and may also vary between telephone service providers. Calls to ‘1800’ numbers from your home phone are free. Calls from public and mobile phones may be timed and charged at a higher rate.

## Disclaimer

The information contained in this publication is intended only as a guide to payments and services. It is your responsibility to decide if you wish to apply for a payment and to make an application with regard to your particular circumstances.